பெருந்தகையீர் வணக்கம்!

இணைய மாநாடும் செம்மொழி மாநாடும் இணைந்து நடக்கிற இந்த வேளையில், இந்தப் பொன்னான வாய்ப்பை வழங்கியுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு உத்தமம் சார்பாகவும் இங்கே வந்துள்ள அறிஞர் பெருமக்கள் அனைவரது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்விணைய மாநாட்டைத் தொடங்கி வைத்து நமக்குப் பெருமை சேர்க்க வருகை தந்திருக்கும் மாண்புமிகு மூத்த துணை அமைச்சர், சிங்கப்பூர், திரு. ஈஸ்வரன் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். சிங்கையில்தான் உத்தமம் முதலில் மலர்ந்தது. உலகெங்கும் தமிழ்

இணைய மாநாடுகளை நடத்த வித்திட்டது சிங்கப்பூரில் நாம் முதன்முதலாக நடத்திய இணைய மாநாடுதான்.

இணைய மாநாட்டுக்கு வருகை தந்ததோடு, தமிழ் கணினி பயன்பாட்டுக்குப் பெரிதும் உதவும் வகையில் தமிழ் மென்பொருள்கள் குறுவட்டையும் எடு-பாஸ் குறுவட்டையும் வெளியிட்டு, சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஆ.ராசா அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

பேராசிரியர் அனந்தகிருட்டிணன் அவர்கள் உத்தமம் நிறுவனத்துக்கு அளித்துவரும் வழிகாட்டுதலால் உத்தமம் மாபெரும் மாநாடுகளை செவ்வனே நடத்தி வருகிறது.  உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டின் ஒரு

பகுதியான தமிழ் இணைய மாநாட்டுக் குழுவின் சார்பாக குழுவின் தலைவர் பேராசிரியர் ஆனந்தகிருஷ்ணனுக்கு நன்றி கூறுகிறோம்.

நம் இணைய மாநாடு சிறக்க ஆரம்பம்  பெரும் ஈடுபாடும் ஆதரவும் எந்நேரமும்  நல்கி வரும் நமது மாண்புமிகு அமைச்சர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா அவர்களுக்கு நம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்!  அவருடன் இணைந்து அயராது ஒத்துழைப்பு அளித்துவரும் தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையின் முதன்மைச் செயலர் திரு. பி.டபிள்யூ.சி.டேவிதார் அவர்களுக்கு எங்களது மனங்கனிந்த நன்றிகள்.

மாநாட்டு அமர்வுகளைத் திறம்பட உருவாக்கியதோடு, மாநாட்டு மலரையும் மிகத் திறமையுடன் உருவாக்கிய முனைவர் வாசு அரங்கநாதன் தலைமையிலான மாநாட்டுக் குழுவுக்கு உத்தமத்தின் நன்றிகள்.

இதுபோன்ற விழாவை நடத்த எண்ணற்றோரின் உதவி இல்லாமல் முடியாது. தமிழிணைய மாநாட்டின் அயல்நாட்டுக் குழுத் தலைவர் திரு வா.மு.சே. கவியரசன் அவர்களுக்கும், உத்தமம் செயல் இயக்குனர் திரு மணியம் அவர்களுக்கும், உத்தமத்தின் எண்ணற்ற தன்னார்வலர்களுக்கும், எல்காட், என்.ஐ.சி மற்றும் அனைத்து அரசு நிறுவன ஊழியர்களுக்கும் எங்களது மன்மார்ந்த நன்றிகள்.

செம்மொழியோடு இணைந்த தமிழ் இணையம்

பூத்துப் பொலியட்டும்!   வாழ்க தமிழ்!